# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

<u>ஆணை நாள் 18.06.2025</u>

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),
மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10786/விசாரணை/E/2022 (W.P.(MD) No.2255/2025)**

திரு.M.ஜெயமணி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம்,
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம்,
சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P.(MD)No.2255 of 2025 என்ற வழக்கின் மீது 28.01.2025 அன்று பிறப்பித்துள்ள உத்தரவில், ஆணை கிடைக்கப் பெற்ற நான்கு வார காலத்திற்குள், மேல்முறையீட்டாளரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது இவ்வாணையம் சட்டத்திற்குட்பட்டு இறுதி ஆணை பிறப்பித்திட உத்தரவிட்டுள்ளது. மேற்குறித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவானது, இவ்வாணையத்தில் 05.05.2025 அன்று கிடைக்கப் பெற்றுள்ளது.**

2. **மேற்குறித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவிற்கிணங்க, இவ்வழக்கின் மீதான விசாரணை அறிவிப்பானது மேல்முறையீட்டாளர் திரு.M.ஜெயமணி மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு 28.05.2025 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.M.ஜெயமணி இவ்வாணையத்தின் விசாரணை அழைப்பாணையை 30.05.2025 அன்று பெற்றுக் கொண்டுள்ளது, அஞ்சல் துறையின் இணையதள Tracking Report-ன்**

**வாயிலாக தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர் 10.06.2025 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தான் சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை)யில் 03.06.2025 அன்று ஆணையத்திற்கு எதிராக அவமதிப்பு மனு (எண்.CONT. P(MD) 4508/2025) தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.**

3. **இவ்வழக்கு தொடர்பான இவ்வாணையத்தின் ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் மீது முந்தைய மாநில தகவல் ஆணையரால் 20.06.2023 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடத்தப்பட்டு, உத்தரவு ஏதும் பிறப்பிக்காத நிலையில் அவர் பணிகாலம் முடிந்து ஓய்வில் சென்றுவிட்ட காரணத்தால், இவ்வழக்கின் மீது மீண்டும் விசாரணை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது.**

4. **இன்று (19.06.2025) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு.M.ஜெயமணி ஆஜராகவில்லை.** மேலும், தனது ஆஜரின்மை குறித்து மேல்முறையீட்டாளர் எவ்வித தகவலும் ஆணையத்திற்கு தெரிவிக்கவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது அவசியமாகும். அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.மு.மகேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், அருப்புக்கோட்டை, திரு.இரவீந்திரன், பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், சாத்தூர் மற்றும் திரு.சந்திரசேகரன், பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், சிவகாசி, விருதுநகர் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

5. மேல்முறையீட்டாளர் **09.02.2022** தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவினை விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பி வைத்து கீழ்க்கண்ட 2 இனங்களில் தகவலை வழங்கக் கோரியுள்ளார்:-

1. ***Details of Persons, Family and Companies, if any, who hold agricultural land in Virudhunagar District beyond ceiling limit as per current Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling of Land)***

2. ***As per Land Reform Act, what is time period within which Industry/Companies have to set up their Industry/Company after acquiring agricultural land for the purpose and details of Industry/Companies, if any, who have not complied the time period for the agricultural land acquired in Virudhunagar District.***

மேல்முறையீட்டாளரின் 09.02.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவினை பெற்ற விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர், 15.02.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கும் பொருட்டு, மேல்முறையீட்டாளரின் மனுவினை (a) சிவகாசி உதவி ஆட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலருக்கும், (b) பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், அருப்புக்கோட்டை மற்றும் (c) பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், சாத்தூர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

6. அதனைத் தொடர்ந்து, மேல்முறையீட்டாளர் 25.03.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பி வைத்திட, அந்த மேல்முறையீட்டு மனுவினை விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர், 08.04.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கும் பொருட்டு, (a) சிவகாசி உதவி ஆட்சியரின் நேர்முக

உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலருக்கும், (b) பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், அருப்புக்கோட்டை மற்றும் (c) பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், சாத்தூர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

7. அதற்கு பின்பாக, மேல்முறையீட்டாளர் 17.05.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கும் அனுப்பி வைத்து, தான் மாவட்ட அளவில் இச்சட்டத்தினை மீறியது குறித்த தகவலை கோரியதாகவும், ஆனால் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர் தனது மனுவினை மூன்று வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கு மாற்றுதலில் அனுப்பி வைத்துள்ளதாகவும், மாவட்ட தலைமையிடத்தில் தகவல்கள் இல்லை என்றும், தனக்கு அருப்புக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலகத்திலிருந்து மட்டுமே ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டு, 12.05.2025 ஆவணங்களை பார்வையிட்டு பகுதி தகவல்களை பெற்றுக் கொண்டதாகவும், சாத்தூர் மற்றும் சிவகாசி வருவாய் கோட்ட பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து எவ்வித தகவலும் கிடைக்கப் பெறவில்லை என்றும், தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் (நிலஉச்சவரம்பு நிர்ணயம்) சட்டத்தினை தகுந்த முறையில் பயன்படுத்துவதற்கு நாளதுதேதிவரையிலான தொகுக்கப்பட்ட தகவல்கள் தேவை என்றும், ஆனால் அத்தகவல்கள் தனக்கு கிடைக்கப் பெறவில்லை (**Requested consolidated upto date information is vital for effective implementation of Tamil Nadu Land Reforms (Fixation of Land Ceiling) Act, but the information is not available to me**) என்றும் தெரிவித்துள்ளார்.

8. இன்றைய விசாரணையில் ஆஜரான அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் வருவாய் கோட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர்களும் மற்றும் சிவகாசி சார் ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரும் மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கியுள்ளது குறித்து எடுத்துரைத்தனர்.

**<u>(i) அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் :-</u>**

இன்றைய விசாரணையில் அஜரான அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கியுள்ளது கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தார் :-

- மேல்முறையீட்டாளரின் சட்டப்பிரிவு 6(1) மனுவினை விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களிடமிருந்து சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றுதலில் பெற்ற பின்பாக, உரிய காலத்திற்குள், 09.03.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்கள் பல்வேறு கிராமங்களிலிருந்து பெற்று தொகுத்து வழங்கக்கூடியதாக உள்ளதாலும், இப்பணி அலுவலகப் பணியை பாதிக்கும் என்பதாலும் சட்டப்பிரிவு 7(9)-ன் கீழ் தகவல் வழங்க இயலாது என்று பதில் வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

- மேல்முறையீட்டாளரின் 25.03.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவினை இணைத்து அனுப்பப்பட்ட விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் 08.04.2022 தேதியிட்ட கடிதமானது தங்கள் அலுவலகத்தில் 21.04.2022 அன்று கிடைக்கப் பெற்றதாகவும், உரிய காலத்திற்குள், 04.05.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் அளவுக்கதிமான தகவல்கள் என்பதால், 12.05.2022 அன்று பொது அதிகார அமைப்பில் ஆஜராகி பார்வையிட அனுமதி வழங்கியதன் பேரில், மேல்முறையீட்டாளர் 12.05.2022 அன்று பொது அதிகார அமைப்பில் ஆஜராகி, ஆவணங்களை பார்வையிட்ட பின்பாக, தான் கோரும் தகவல்கள் இவ்வலுவலக கோப்பில் கிடைக்கப் பெறவில்லை என்றும், இவ்வலுவலக கோப்பில் தகவல் ஏதும் சேகரிக்க முடியவில்லை எனக் கூறி சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார்.

- அதனைத் தொடர்ந்து இவ்வாணையத்தின் முதல் அறிவிப்பினை தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலர் மீண்டும் மேல்முறையீட்டாளருக்கு 12.08.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 26.08.2022 அன்று நேரில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட்டு தேவையான தகவல்களை நகல் எடுத்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதாகவும், அக்கடிதத்தினை பெற்ற மேல்முறையீட்டாளர் 24.08.2022 தேதியிட்டு தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், "**மேற்கூறிய விஷயத்தைப் பற்றிய குறிப்புடன் 12.05.2022 அன்று நான் உங்கள் அலுவலகத்திற்கு சென்றபோது அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்கள் எதுவும் (ஆட்களின் எண்ணிக்கை, பெயர் மற்றும் முகவரி, மொத்த நிலம், சர்வே எண் மற்றும் இடம்) கிடைக்கவில்லை. நீங்கள் வழங்கிய கையேடு பதிவுகளிலிருந்து தகவலை சேகரிக்க முடியவில்லை. இதனை உங்கள் கோப்பில் பதிவு செய்திருக்கிறேன். உங்கள் அலுவலகத்தில் இருந்து மேலும் எந்த தகவலும் கிடைக்காது என்பதால், நீங்கள் குறிப்பிட்ட தேதியில் (26.08.2022) நான் உங்கள் அலுவலகத்திற்கு வரமாட்டேன் என்று உங்களுக்கு தெரிவிக்கிறேன்**" என்று தெரிவித்துள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் எடுத்துரைத்து, மேற்குறித்த கடிதங்களின் நகல்களையும் ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

- மேலும் அவர், மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் ஒவ்வொரு கோப்புகளிலிருந்தும் தொகுத்து அளிக்கப்பட வேண்டிய தகவல்கள் என்பதால், மேல்முறையீட்டாளரை ஆவணங்களை பார்வையிட்டு தேவையான நகல்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்ததாகவும் எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

**<u>(ii) சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் :-</u>**

இன்றைய விசாரணையில் அஜரான சாத்தூர் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளரது சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு 20.09.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய விபரம் குறித்த தகவல்கள் MRI பதிவேடு மற்றும் கோப்புகள் உள்ளதாகவும், அலுவலக நேரங்களில் அலுவலக பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் மேல்முறையீட்டாளர் பார்வையிட்டு, அவர் கோரும் ஆவணங்களை நகல் எடுத்து தரப்படும் என்று தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். மேலும் அவர், மேற்குறித்த கடிதத்தின்படி மேல்முறையீட்டாளர் ஆவணங்களை பார்வையிட நேரில் ஆஜராகவில்லை என்றும் தெரிவித்தார். மேல்முறையீட்டாளரின் சட்டப்பிரிவு 19(1) மனுவினை பெற்ற பின்பாக மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கியது குறித்து பொது அதிகார அமைப்பில் எந்த பதிவுகளும் இல்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

**<u>(iii) சிவகாசி சார் ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் :-</u>**

இன்றைய விசாரணையில் ஆஜரான சிவகாசி வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளரின் சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு, 05.04.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்கள் பல்வேறு கிராமங்களிலிருந்து பெற்று தொகுத்து வழங்கக்கூடியதாக உள்ளதாலும், இப்பணி அலுவலகப் பணியை பாதிக்கும் என்பதாலும் சட்டப்பிரிவு 7(9)-ன் கீழ் தகவல் வழங்க இயலாது என்று பதில் வழங்கியுள்ளதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளரின் சட்டப்பிரிவு 19(1) மனுவினை பெற்ற பின்பாக மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கியது குறித்து பொது அதிகார அமைப்பில் எந்த பதிவுகளும் இல்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

9. இன்றைய விசாரணையில் ஆஜரான மூன்று பொதுத் தகவல் அலுவலர்களும், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் என்பது அளவுக்கதிகமான தகவல்கள் என்றும் பல்வேறு கோப்புகளிலிருந்து தொகுத்து வழங்கக்கூடியதாக அமைந்துள்ளது என்றும், அவை சட்டப்பிரிவு 7(9)-ல் குறிப்பிட்டுள்ளவாறு பொது அதிகார அமைப்பின் வளஆதாரங்களை திசைதிருப்பும் வகையில் அமைந்துள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் கோரும் ஒருங்கிணைக்கப்பட்ட விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு தனியாக ஏதுமில்லை என்றும் எடுத்துரைத்தனர். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

10. மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கான அழைப்பாணையை பெற்ற பின்பாகவும் அவர் நேரில் ஆஜராகி அவர்தம் கருத்தை எடுத்துரைக்கத் தவறியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

11. அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் வருவாய் கோட்ட அலுவலகங்களின் பொதுத் தகவல் அலுவலர்கள், ஆவணங்களை பார்வையிட அனுமதியளித்தும், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் தனித்தனி கோப்புகளிலிருந்து தொகுத்து வழங்கக்கூடியது என்று தெரிவித்து தகவல் வழங்க இயலாது என்றும், அருப்புக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலரால் தகவல் தொடர்பான MRI பதிவேடு உள்ளது என்றும் வெவ்வேறு விதமாக, முரண்பாடான தகவல்கள் வழங்கியுள்ளனர் என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. மேல்முறையீட்டாளர் தனது சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாவது மேல்முறையீட்டு மனுவில், தனக்கு மாவட்ட அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்கள் வழங்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளார்.

12. ஆகவே இன்றைய விசாரணையின் முடிவில், இவ்வாணையத்தால் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகிறது:-

*1. இவ்வாணை கிடைக்கப் பெற்ற* ***உடன், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள்,***

*(அ) (i) மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் எந்தெந்த அலுவலகங்களில் பராமரிக்கப்படக்கூடியவை, எவ்வாறு பராமரிக்கப்படக்கூடியவை, அவை தனித்தனி கோப்புகளாக பராமரிக்கப்பட வேண்டியவையா, ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்கள் அடங்கிய ஆவணம்/பதிவேடாக பராமரிக்கப்பட வேண்டியவையா, இல்லையா என்பது குறித்தும்,*

*(ii) இன்றைய விசாரணையில் ஆஜரான சாத்தூர் வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளவாறு, MRI பதிவேடு என்பது மேல்முறையீட்டாளர் கோரும் தகவல் அடங்கிய ஆவணமா, அவை எந்தெந்த அலுவலகங்களில் பராமரிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும்,*

*(இ) அவ்வாறு மேற்குறித்த ஆ(i) & (ii)-ல் குறிப்பிட்ட ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியவை எனும்பட்சத்தில், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டாளர் அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் சிவகாசி வருவாய் கோட்ட அலுவலகங்களில் அதனை எடுத்து வைத்திட அறிவுறுத்திடவும்*

*(ஈ) அவ்வாறான ஆவணங்களில் உள்ள விபரங்களை பரிசீலித்த பின்பாக* ***மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழ் வழங்கக்கூடியவையா என்பதை விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் முடிவு செய்து****,*

*(i) தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளின்படி வழங்கப்படக்கூடிய தகவல்கள் எனும்பட்சத்தில், அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் சிவகாசி வருவாய் கோட்ட அலுவலகங்களில் மேல்முறையீட்டாளருக்கு வெவ்வேறு தினங்களை குறிப்பிட்டு அவ்வாறு சேகரித்து வைக்கப்பட்ட ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கி, மேல்முறையீட்டாளர் ஆவணங்களை ஆய்வு செய்வதை புகைப்பட/வீடியோ எடுத்து, அவர் ஆவணங்களை பார்வையிட்ட பின்பாக அவர் கோரும் ஆவண நகல்கள் பற்றிய விபரங்களை மேல்முறையீட்டாளரிடமிருந்து எழுதி பெற்ற பின்பாக,*

*(ii) மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் வழங்கப்படக்கூடிய தகவல்கள் எனில், அவற்றை மேல்முறையீட்டாளருக்கு* ***மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிடவும்,***

*(iii) மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் வழங்கப்படக்கூடியவை அல்ல எனில், அது குறித்த விபரத்தை மேல்முறையீட்டாளருக்கு* ***மாவட்ட வருவாய் அலுவலர்*** *வழங்கிடவும்,*

*(எ) அவ்வாறு மேல்முறையீட்டாளர் கோரிய ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியதில்லை எனும்பட்சத்தில், அது குறித்த தகவலை மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில்* ***விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்*** *அனுப்பி வைத்திடவும்,*

*மேற்கூறிய நடவடிக்கை சம்பந்தப்பட்ட அறிக்கைகளை மேல்முறையீட்டாளர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபர அறிக்கையை இவ்வாணையத்தில்* ***03.07.2025 அன்று விசாரணையில் இன்று ஆஜரான மூன்று வருவாய் கோட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர்கள் மூலமாக ஆணையத்தில் நேரில் சமர்ப்பித்திட விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது****.*

*(2) மூன்று வருவாய் கோட்ட அலுவலகங்களிலும் மேல்முறையீட்டாளர் தகவல் கோரும் ஆவணம் பராமரிக்கப்பட வேண்டியவை, ஆனால் பராமரிக்கப்படவில்லை அல்லது கிடைக்கப் பெறவில்லை எனும்பட்சத்தில், மேற்படி ஆவணங்கள் பராமரிக்கப்படாததற்கு/கிடைக்கப் பெறாததற்கு யார் பொறுப்பு என்பதை கண்டறிந்து, அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்க அவரது உயரதிகாரிக்கு உத்தரவிடக்கூடாது என்பதற்கான எழுத்துமூலமான விளக்கத்தினை அவர்களிடமிருந்து பெற்று, அது குறித்த அறிக்கையை* ***03.07.2025 அன்று விசாரணையில் இன்று ஆஜரான மூன்று வருவாய் கோட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர்கள் மூலமாக ஆணையத்தில் நேரில் சமர்ப்பித்திட விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு*** *இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

*மூன்று வருவாய் கோட்ட பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து அறிக்கைகளை பெற்று* ***விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு ஒருங்கிணைத்து அறிக்கையினை அனுப்ப வேண்டும். அதேபோன்று, இவ்வாணையத்திற்கும், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/ மேல்முறையீட்டு அலுவலர், அனைத்து விபரங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையாக அனுப்ப வேண்டும் என்று இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

*(3) மேல்முறையீட்டாளர் விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து தகவல் பெறப்பட்ட பின்பாக, அது குறித்து ஏதும் தெரிவிக்க விரும்பும்பட்சத்தில்,*

*அவர்தம் கருத்தினையும், மீண்டும் விசாரணையில் பங்கேற்க விரும்பினால், அது குறித்தும் **18.07.2025-க்குள் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு மேல்முறையீட்டாளருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண். SA 10786/விசாரணை/E/2022 (W.P.(MD) No.2255/2025)**</u>

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சாத்தூர், விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35. **(W.P.(MD) No.2255/2025 - தொடர்பாக)**

திரு.M.ஜெயமணி
3/26-1 தெற்கு தெரு, வலையபட்டி,
வெம்பக்கோட்டை வட்டம்,
விருதுநகர் மாவட்டம்-626 127. **(BY RPAD)**

Copy to: File

RJ/PS 23.5